செ.வெ. எண்: 715 நாள்: 02.12.2011

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (2.12.2011) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு சிறு துறைமுகங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் நில வாடகையில் அரசின் பங்கான 4 கோடியே 75 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் வழங்கினார்.

2010–2011 - ஆம் ஆண்டில், தமிழகத்தில் உள்ள 22 சிறுதுறைமுகங்கள் வாயிலாக சுமார் 16.11 லட்சம் மெட்ரிக் டன் சரக்குகள் கையாளப்பட்டு, அதன் மூலம் துறைமுக மற்றும் சரக்கு தீர்வையாக சுமார் 9 கோடியே 46 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. இத்துடன் இதர வருவாய் இனங்களையும் சேர்த்து தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மொத்த வருவாய் 27 கோடியே 84 லட்சம் ரூபாய் என அதிகரித்துள்ளது.

இத்தொகையிலிருந்து தமிழக அரசுக்கான நில வாடகை பங்குத் தொகை 4 கோடியே 75 லட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் சார்பில் அதன் தலைவரும் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சருமான திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது தலைமைச் செயலாளர், நிதித்துறை முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், மாநிலத் துறைமுக அலுவலர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

நாள்: 2.12.2011